
# பூரம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ பூரம் சக்தி**

பராமுத நிராகாரம், விகாசனம், விகோடணம்,

பரசு கோதயம், அட்சயம்.

**3. திருப்பாவைபாசுரம் – 28 பூரம் இயல்பு**

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்

அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்

பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்

குறைவொன்று மில்லாத கோவிந்தா உன்தன்னோடு

உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது

அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்

சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே

இறைவா நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

**Video Link : https://youtu.be/HK7t_xjDExQ**

**விளக்கம் :**

கறவைகள் பின் சென்றால் கானகத்தில் பராமுத நிராகாரம் என்கிற வகையில் கானம் சேர்ந்து உண்போம். இங்கே பசி நோக்கார்

கண்துஞ்சார். ஆனால், அமுத கானத்தையே உணவாகக் கொண்டு பல்வேறு தெய்வீக அருள்களை விகாசனமாக, விகோடணமாக, விநோதமாக பூரம் நக்ஷத்ரகாரர்கள் அனுபவிப்பார்கள்.

இதற்கு முன் உதாரணமே ஆண்டாள் நாச்சியார் ஆவார். அடிப்பூரத்து ஆண்டாள் நாம் எல்லோரையும் அறியாத பிள்ளைகளாக அன்பினால் ரங்கனை.

சிறுபேரிட்டு அழைத்து உறவு கொண்டாடி நீக்கமில்லா உறவு தன்னை, குறை ஏதும் இல்லாத கோவிந்தா, என பாட அருள் பெற்று அனுபவிக்க கொடுத்து வைத்தவர்கள், ஆண்டாள் பூரம் மற்றும் ஆண்டாள் பூரமேயாகும்.

அட்சய பாத்திரமாக அருள் வளர்க்கும் மற்றும் அனைத்து செல்வங்களையும் தரும், பூரம் நக்ஷத்ரகாரர்கள் இப்பிறவியில் புண்ணியம் செய்தவர்கள், ஜீவதிசைகயில் பரமாத்மாவை சேருவது, கலப்படமற்ற அன்பினால் மட்டுமே முடியும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல வாழ்க்கையில் நடத்திக் காட்டுபவர்களே பூரம் நக்ஷத்ரம்.

மலர்தலே வாழ்வின் இன்பம். எனவே, விகாசனம் என்ற சொல்லுக்கேற்ப அறியாத பிள்ளைகளாகிய பூரம் நக்ஷத்ர தாரர்கள்

அறிந்து கொள்ளவே விநோத நட்பு யதார்த்தமாக அமையும். மேலும் அடையும் வழியும் வித்தியாசமான விகோடணமாகும்.

இந்த உறவு எல்லோருக்கும் கிடைக்க அருள் செய்யவே. பூரமே வருக! பூரமே அருள்க!

## 4. வேதத்தில் பூரம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

அரியம்நாய வித்மஹே
பசுதேஹாய தீமஹி
ஜீவந்த விஸேம தீமஹி
பூர்வபல்குநி ப்ரசோதயாத்

வாசம் பொழியும் மலர்போல
வற்றா அட்சய வரம் நல்கும்
கோணம் கொண்ட நிலையினிலும்
குணத்தால் சிறப்பாய் நமோ நமோ

வேண்டிய தேவைகள் முடித்திட்டு
விநோதம் கொடுக்கும் கோகிலமே
வெண்மலர் சரமே உனதாகும்
ஜீவ சேர்க்கை நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே
த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. பூரம் கவிதை

ஆடி பூரம் வரின் ஆடாத கால்களும் ஆடும்
பாடி பூரம் வரின் பாடாத குரல்களும் அதிரும்
தேடி பூரம் வரின் கேளாத குறைகளும் தீரும்
கூடி பூரம் வரின் கூடாத நிஜங்களும் குளிரும்

நிராகாரம், மணம், குணம் நிறைந்த அமுதமே
இகாகாரம், மனம், பணம் நிறைந்த அகிலமே
பராகாரம், அனல், தணல் நிறைந்த நிமலமே
மகாகாரம் புனர் - புணர் நிறைந்த பூவலமே

வாழ்வதும், வளர்வதும். தேய்வதும் நின் அடி சேரவே
ஆள்வதும், அளிப்பதும், அணைப்பதும் நின் புகழ்பாடவே
பகைப்பதும், புகைப்பதும், வீழ்வதும் உடன் விளைச்சலே
மூர்க்கமும், மார்க்கமும், முயல்வதும் நின் கடைக்கண்ணே

கோஉரியும், கோணங்கியும், கோலமதில் கோடணமே
கோமகளும், கற்பகமும், கணநேரத்தில் அட்சயமே
கோசாரமும், க்ருகசாரமும், ஆசாரமும் சமசாகரமே
கோபாலனோ, கோவிந்தனோ, கோயிலிலே கோதயமே

ஏர்முனை தரணியிலே, போர்முனை பரணியிலே
பார்முனை பண்டமாற்றம் ஊர்முனை உதயத்திலே
வேர்முனை நீர்தேடும் கார்முனை கரைந்தோடும்
ஆர்முனை நீதியாகும் கூர்முனை உண்மையாகும்

உயிர்களுக்கும் பேரின்பம்; பயிர்களுக்கும் பேரின்பம்
உறவுகளுக்கும் பேரிலக்கு; நட்புகளுக்கும் பேரிலக்கு
உலகுக்கும் பேரமைதி; உரசலுக்கும் பேரமைதி
உதவிகட்கும் பேரிசைவு; உன்னடிகாண பேரிசைவு

## 6. அபிராமி அந்தாதியில் பூரம் சக்தி

### நல்லடியார் நட்பும் பெற

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்

கண்ணியும், செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்

நண்ணி இங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்

பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

### உலகினை வசப்படுத்த

இடம் கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி, இளகி, முத்து

வடம்கொண்ட கொங்கை மலை கொண்டு, இறைவர் வலிய நெஞ்சை

நடம்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்

படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே.

### தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடி! பாசாங் குசை! பஞ்ச பாணி! இன்சொல்

திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்

பரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப்புச் சிலைக்கே

எரிபுரை மேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

### பிரிவுணர்ச்சி அகல

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனை மங்கலமாம்

அவளே, அவர் தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்

இவளே, கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்

துவளேன், இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பூரம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் உத்பவாய நம – உதிக்கும் ஆற்றலே போற்றி

ஓம் க்ஷபநாய நம – பிறப்பிலேயே பேரொளியே போற்றி

ஓம் தேவாய நம – விண்வெளி விளையாட்டு பிள்ளையே போற்றி

ஓம் ஸ்ரீகர்ப்பாய நம – சம்சாரசாஹர கருப்பையே போற்றி

ஓம் பரமேஸ்வராய நம – பரம ஈஸ்வர காருண்யமே போற்றி

ஓம் கரணாய நம – பிரபஞ்சத்தின் காரணியே போற்றி

ஓம் காரணாய நம – கர்மாவில் மூல காரணியே போற்றி

ஓம் கர்த்ரே நம – கர்த்தாவே விதாதாவே போற்றி

ஓம் விகர்த்ரே நம – விசேஷ செயலாக்கமே போற்றி

ஓம் கஹநாய நம – எவரும் அறியாத இயற்கையே போற்றி

ஓம் குஹழய நம – இரகசிய மாயை மனமே போற்றி

ஓம் வ்யவஸாபாய நம – அறிவுப்படுகையே போற்றி

ஓம் வ்யவஸ்தாநாய நம – பிரபஞ்சத்தின் இயக்குனரே போற்றி

ஓம் ஸம்ஸ்தாநாய நம – இயற்கையின் முடிவுரையே போற்றி

ஓம் ஸ்தாநதாய நம – துருவன் முதல் மனிதன்வரை கர்மாவின் நிலைப்பாடே போற்றி

ஓம் த்ருவாய நம – அழிவில்லாத அமரத்துவமே போற்றி

ஓம் பார்த்தயே நம – பரமாத்மாவின் அந்தரங்க இன்பமே போற்றி

ஓம் பரமஸ்பக்ஷ்டாய நம – இலக்குமி வாழும் இதயமே போற்றி

ஓம் துஷ்டாய நம – பரம்பொருளின் வெளிப்பாடே போற்றி

ஓம் புஷ்டாய நம – எங்கும் நிறைந்த அன்பு மொழியே போற்றி

ஓம் ஸ⁶பேஷணாய நம – மானுட கீதை திருப்பாவை தந்தவளே போற்றி

ஓம் ராமாய நம – யோகிகளின் ஞானக்களிப்பே போற்றி

ஓம் விராமாய நம – நிர்வாணமும், முக்தியும் தருபவளே போற்றி

ஓம் விராஜாய நம – காமாட்சி அருளில் காமம் களைந்தவளே போற்றி

ஓம் மார்காய நம – காதல் கசிந்த மார்க்கமே போற்றி

ஓம் நேயாய நம – நேய நிலைக்கதவம் திறந்தவளே போற்றி

ஓம் நயாய நம – தலைவரில்லா தலைமையே போற்றி

ஓம் அநயாய நம – வீர வணக்கமே போற்றி

| | |
|---|---|
| ஓம் வீராய நம | – பெண்மையின் ஆளுமையே போற்றி |
| ஓம் ஸக்திமதாம் ஸ்ரேஷ்டாய நம | – நடை, உடை, பாவனை தந்த திருவே போற்றி |
| ஓம் தர்மாய நம | – சூடிக்கொடுத்த சுடர் கொடியே போற்றி |
| ஓம் தர்மவிதுத்தமாய நம | – வைகுண்டத்தின் முன்னுரையே போற்றி |
| ஓம் வைகுண்டாய நம | – எம்பாவையில் ரெம்பாவாய் போற்றி |
| ஓம் புருஷாய நம | – எண்ணங்களின் இறைத்தன்மையே போற்றி |
| ஓம் ப்ராணாய நம | – வாழ்வில் இலட்சியமே போற்றி |
| ஓம் ப்ராணதாய நம | – பிரணவத்தின் நாராயணனே போற்றி |
| ஓம் ப்ருதவே நம | – உலகின் விரிவாக்கமே போற்றி |
| ஓம் ஹிரண்யகர்ப்பாய நம | – தங்க முட்டையிடும் வங்கக்கடலே போற்றி |
| ஓம் ஸத்ருக்நாய நம | – தேவர்களின் நட்பே போற்றி |
| ஓம் வ்யாப்தாய நம | – விளைவுகளின் விழாக்கோலமே போற்றி |
| ஓம் வாயவே நம | – பக்தர்களின் உல்லாசமே போற்றி |
| ஓம் அதோக்ஷஜாய நம | – பாவையர்களின் தனி எண்ணமே போற்றி |

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் பூரம் சக்தி

பஞ்சப்ரேதாஸநாஸீநா பஞ்சப்ரஹ்மஸ்வரூபிணீ
சின்மயீபரமாநந்தா விஜ்ஞான கனரூபிணீ

த்யான த்யாத்ருத்யேயரூபாதர்மாதர்ம விவர்ஜிதா
விச்வருபா ஜாகரிணீ ஸ்வபந்தீ தைஜஸாத்மிகா

ஸுப்தாப்ராஜ்ஞ்ஜாத்மிகாதுர்யா ஸர்வாவஸ்தா விவர்ஜிதா
ஸ்ருஷ்டிகர்த்ரீப்ரஹ்மருபாகோப்த்ரீகோவிந்த ரூபிணீ

ஸம்ஹாரிணீ ருத்ரரூபா திரோதானகரீச்வரீ
ஸதாசிவானுக்ரஹதாபஞ்சக்ருத்யபராயணா

பானுமண்டலமத்யஸ்தாபைரவீபகமாலினீ
பத்மாஸநா பகவது பத்மநாப ஸஹோதரீ

உன்மேஷ நிமிஷோத்பன்ன விபன்ன புவனாவளீ
ஸஹஸ்ரசீர்ஷ வதநா ஸஹஸ்ராக்ஷ ஸஹஸ்ரபாத்

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## **9. கந்தகுரு கவசகத்தில் பூரம் சக்தி**

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே

ஆறுமுகமான குரோ அறிந்திட்டேன் உன் மகிமை

இக்கணமே வருவாய் என் ஸ்கந்த குருவே நீ

என்னைக் காத்திடவே எனக்கு நீ அருளிடவே

அரைக் கணத்தில் நீயும் ஆடி வருவாயப்பா

வந்தென்னைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ

அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே

ஸூப்ரஹ்மண்யனே சோகம் அகற்றிடுவாய்

ஞான ஸ்கந்தரே ஞானம் அருள்வாய் நீ

ஞான தண்டபாணியே என்னை ஞான பண்டிதனாக்கிடுவாய்

அகந்தையெலாம் அழித்து அன்பினை ஊட்டிடுவாய்

அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வையப்பா

அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி  நிறுத்திவிடு

அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்

உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே

உறுதியாக நானும் பற்றிட  உவந்திடுவாய்

எல்லையில்லாத அன்பே இறைவெளி என்றாய் நீ

அங்கிங்கெனாதபடி எங்கும் அன்பென்றாய்

அன்பே சிவமும் அன்பே சக்தியும்

அன்பே ஹரியும் அன்பே ப்ரம்மனும்

அன்பே தேவரும் அன்பே மனிதரும்

அன்பே நீயும் அன்பே நானும்

அன்பே சத்தியம் அன்பே நித்தியம்

அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்

அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்

அன்பே ப்ரமமமும் அன்பே அனைத்துமென்றாய்

அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்

எங்கும் நிறைந் அன்பே என் குருநாதனப்பா

அன்பில் உறையும் அருட் குருநாதரேதான்

ஸ்கந்தாச்ரமத்தில் ஸ்கந்த குருவானான் காண்

மூவரும் தேவரும்  முனிவரும் போற்றிடவே

ஸ்கந்தாச்ரமந்தன்னில் ஸ்கந்த ஜோதியுமாய்

ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு

இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு

எல்லையில்லாத உன் இறைவெளியைக் காட்டிடுவாய்

முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே

நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ

உன்னையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்.

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

## 10. கந்தர் அநுபூதி பூரம் சக்தி

கருதா மறவா நெறிகாண, எனக்கு

இருதாள் வனசம் தர என்று இசைவாய்

வரதா, முருகா, மயில் வாகனனே

விரதா, சுர சூர விபாடணனே.(21)

காளைக் குமரேசன் எனக் கருதித்

தாளைப் பணியத் தவம் எய்தியவா

பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்

வேளைச் சுர பூபதி, மேருவையே.(22)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் பூரம் சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| ஹரிகாம்போதி | ஹரிகாம்போதி | தீரசங்கரா பரணம் | நாகநந்தினி |

**12. மூலமந்திரம்**

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஆற்றல் அலங்காரமே சரணம்

குறையில்லா கோவிந்தனே சரணம்

நிறையோடு நிரந்தரமே சரணம்.

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| பலாசு | வாகை | ருத்ராட்சம் | பலாசு |

**14. பரிகாரம்**

- ஆடம்பர பொருட்கள் வாங்க முடியாத ஏழைக்கு வாங்கித் தரவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.

- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு ஸ்ரீஹரி தீர்த்தேஸ்வரர் திருக்கோயில்,** திருவரங்குளம் - புதுக்கோட்டை.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**

Regd No: 96/19

33.கோசாலை, கிரிவலம்,

திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org

www.yaasha.in

**Email :** jhohumm@gmail.com

**Youtube :** aathmanakshatra